மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

தரம் - 06	கணிதம்	நேரம்: 2.00 மணித்தியாலங்கள்

சுட்டெண் ....

பகுதி-I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) வட்ட வடிவமான பொருட்களுக்கு மூன்று உதாரணங்கள் தருக?

2) 340 ஐ 7 ஆல் வகுக்கும்போது ஈவு யாது?

3) பிரதான திசைகள் இரண்டிற்கு இடைப்பட்ட கோணம் எவ்வாறு அழைக்கப்படும்?

4) சுருக்குக $\frac{1}{5}+\frac{3}{5}$

5) 12 இன் காரணிகள் அனைத்தையும் எழுதுக?

6) "இரண்டு பில்லியன் இரண்டு" என்பதை இலக்கத்தில் எழுதுக?

7) ஒரு நாளில் எத்தனை நிமிடங்கள் உள்ளன?

8) < , > பொருத்தமான குறியீட்டை இடுக. (-7)….. (3)

9) 75 இனை கிட்டிய பத்திற்கு மட்டம் தட்டும்போது பெறப்படும் விடை யாது?

10) எமது சூழலில் செங்கோணத்தை அவதானிக்கும் சந்தர்ப்பங்கள் இரண்டு எழுதுக?

11) ஏறுவரிசைப்படுத்துக: 2.23, 0.5, 0.56, 0.23

LMDMUnit

12) முதலாவது சேர்த்தி எண் யாது?

13) 1மீற்றரில் எத்தனை மில்லிமீற்றர்கள் உண்டு?

14) புத்தகம் ஒன்றின் விலை ரூபா x உம் பேனா ஒன்றின் விலை ரூபா 25 உம் ஆகும். புத்தகம் ஒன்றையும் இரண்டு பேனாக்களையும் வாங்கத் தேவையான பணத்தை அட்சரகணித கோவையாகத் தருக?

15) 1kg ல் எத்தனை 50g கள் உண்டு?

16) பெறுமானம் காண்க : 4^3

17) 56:21 என்ற விகிதத்தை எளிய வடிவில் எழுதுக

18) x=20 எனில் 38-x ன் பெறுமானம் யாது?

19) மிகப்பெரிய மறை முழு எண் யாது?

20) இன்றைய திகதியினை நியம முறையில் எழுதுக.

(20x2=40 புள்ளிகள்)

LMDMUnit

பகுதி II

- **ஐந்து வினாக்களிற்கு மட்டும் விடையளிக்க.**

1.

a) ஒரு மில்லியனிலும் மூன்று குறைந்த எண்ணை
   I. நியம முறையில் எழுதுக
   II. சொற்களில் எழுதுக

b) 3,5,0,8 ஆகிய இலக்கங்களை ஒரு முறை மட்டும் பயன்படுத்தி ஆக்கத்தக்க
   I. மிகப்பெரிய எண் யாது?
   II. மிகச்சிறிய எண் யாது?
   III. அவ் இரு எண்களினதும் கூட்டுத்தொகை யாது

c) 2460 புத்தகங்கள் 15 வகுப்புகளிற்கு சமனாகப் பங்கிடப்படின் ஒரு வகுப்பிற்கு கிடைக்கும் புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

d) 1,5,8,6 ஆகிய இலக்கங்களை ஒரு முறை மட்டும் பயன்படுத்தி பின்வரும் நிபந்தனைகளிற்கமைய உருவாக்கத்தக்க நாவிலக்க எண் ஒன்று தருக.
   - நூறினிடத்து இலக்கம் 8 ஆகும்
   - 5 ஆல் மீதியின்றி வகுபடும்.
   - மிகப்பெரிய எண் ஆகும்

(2+2+1+1+2+2+2)

2.

a) < , > என்னும் குறியீட்டைப் பயன்படுத்தி ஒப்பிடுக

I. $\frac{3}{7}$.............$\frac{5}{7}$ III. 4.04 .... 4.40

II. $\frac{3}{5}$ ....$\frac{2}{3}$ IV. 0.03 .... 0.3

b) சுருக்குக

I. $\frac{2}{3}+\frac{2}{9}$ III. 7.6 + 4.32

II. $\frac{3}{4}-\frac{7}{10}$ IV. 5.8 – 2.95

(1+1+1+1+2+2+2+2)

3.

a) குறித்த ஒரு பாடசாலையில் 6ம் தரத்தில் கற்கும் 38 மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தரும் விதம் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு வருகை தரும் விதம்	மாணவர்களின் எண்ணிக்கை
நடந்து	13
ஈருருளி மூலம்	10
பேரூந்து மூலம்	
வேறு வழிகள் மூலம்	8

I. பேரூந்து மூலம் வருகை தரும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

II. ஈருருளி மூலம் வருகை தரும் மாணவர்களின் எண்ணிக்கையினை வரவுக்குறி மூலம் காட்டுக.

b) குறித்த ஒரு பாடசாலையில் 6ம் தரத்தில் கற்கும் 38 மாணவர்களின் குறித்த ஒரு வாரத்திற்கான வருகை கீழே படவரைபில் காட்டப்பட்டுள்ளது.

திங்கள்	☺ ☺ ☺ ☺ ☺ ☺
செவ்வாய்	☺ ☺ ☺ ☺ ☺
புதன்	☺ ☺ ☺ ☺ ☺ ☺
வியாழன்	☺ ☺ ☺ ☺
வெள்ளி	☺ ☺ ☺ ☺ ☺

☺ = 6 மாணவர்கள்

I. செவ்வாய் பாடசாலை வருகை தராத மாணவர்களின் எண்ணிக்கை யாது?

II. சம எண்ணிக்கையான மாணவர்கள் வருகை தந்த தினங்கள் எவை?

III. திங்கள்,வியாழன் வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கைக்கிடையிலான விகிதம் யாது?

IV. அவ் வாரத்திற்கான மாணவர்களின் மொத்த வரவு யாது?

(1+2+2+1+2+2)

4.

a) I. (-5) தொடக்கம் (+5) வரை குறிக்கப்பட்ட எண்கோடு ஒன்று வரைக

II. A = (+3) , B = (-1) , C = 0 , D = (-4) என்ற புள்ளிகளை அதன் மீது குறிக்க.

III. அவ் எண்களை இறங்கு வரிசையில் எழுதுக

b) 

I. இக் கோலத்தின் 4ஆம் 5ஆம் நிலைகளை வரைக

II. இக் கோலத்தினால் காட்டப்படும் எண் வகை யாது ?

c) குறித்த எண் ஒன்றை கிட்டிய 10இற்கு மட்டந்தட்டிய போது 80 பெறப்பட்டதெனின் அவ் எண்ணாக இருக்கத்தக்க மிகப் பெரிய, மிகச் சிறிய எண்களினைத் தருக

(2+2+2+2+2+2)

5.

I. 10 இற்கும் 20 இற்கும் இடைப்பட்ட அனைத்து முதன்மை எண்களையும் தருக?

II. 24,36 என்ற எண்களிற்கு பொதுவான காரணிகள் 4 தருக?

III. 2,4,6 என்ற எண்களின் மடங்காக அமையத்தக்க மிகச்சிறிய எண் யாது?

IV. $7 \times 5 = 35$ எனின் …………. என்ற எண்ணின் மடங்காகவும் …………….. என்ற எண்ணின் மடங்காகவும் 35 காணப்படும்.

V. வெற்றுக் கூடுகளை நிரப்புக $\mathbf{81 = \square^2 = 3^{\square}}$

VI. கண்ணன் வீட்டில் இருந்து பாடசாலைக்கு x km தூரத்தினை புகையிரத்திலும் y km தூரத்தினை நடந்துமாக செல்கிறான். புகையிரதத்தில் சென்ற தூரம் 11 km எனின் வீட்டீல் இருந்து பாடசாலைக்கு சென்று மீண்டும் வீட்டிற்கு வரும் தூரத்திற்கான அட்சர கணித கோவையை தருக?

(2+2+2+2+2+2)

6.

kg		m
	km	cm
mg		g

I. மேலே தரப்பட்ட அலகுகளை இரண்டு கூட்டங்களாக வகைப்படுத்துக.

II. அவற்றிற்கு பொருத்தமான பெயர் இடுக

III. பின்வருவனவற்றிற்கு பொருத்தமான அலகுகளை தரப்பட்ட அலகுகளில் இருந்து தெரிவுசெய்க

a) யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கிடையிலான தூரம்

b) மாணவன் ஒருவனின் திணிவு

IV. மெல்லிய கயிற்றினால் அமைக்கப்பட்ட தரப்பட்ட நாற்பக்கல் ஒன்றின் சுற்றளவிற்கு சமமான சுற்றளவுடைய சதுரத்தின் ஒரு பக்கநீளம் யாது?



V. 500ml ,200ml கொள்ளளவுடைய போத்தல்களை மாத்திரம் பயன்படுத்தி 300ml திரவத்தினை அளக்கும் முறையொன்று தருக

VI. 4kg 650g திணிவினை தராசு மூலம் அளப்பதற்கு தேவையான படிக்கற்களைத் தருக.

(2+2+2+2+2+2)

LMDM Unit